Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தசீய தினசரி National Tamil Daily

மலர் 8 (24-5-66) இதழ் 106

பராபவ வைகாசி 11 ஸபர் 3 செவ்வாய்க்கிழமை

## டானுங் நகர் வீழ்ச்சி

### மேயர் கைது

சைகோன், மே 23

தென் வியட்னும் அரசாங்கம் எதிர்ப்பு கோஷ்டியினர் இன்று ஏராளமானேர் அரசாங்கத் துருப்புகளிடம் சரண்புகுந்தனர், டனுங் நகரின் பௌத்த கோயில் ஒன்றினுள்ளிருந்த கலகக் காரர்கள் அரசாங்கத் துருப்புகளின் தாக்குதலை எதிர்க் முடியாமல் வெளியில் வந்து சரண்புகுந்தனர், டனுங் நகர மேயர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## பத்திரிகைத் தணிக்கை தளர்த்தப்பட்டது

கொழும்பு, திங்கள்

பிரதம மந்திரி சமீபத்தில் மக்கள் பிரதிநிதிகள் சபையில் கொடுத்த வாக்குறுதியைத் தொடர்ந்து இன்று பத்திரிகைத்தணிக்கை சம்பந்தமான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன என்ருலும் நாட்டின் மக்கள் மத்தியில் இன, மத மொழி சம்பந்தமான கிலேசம் விளைவிக்கும் செய்திகளைப் பிரசுரிப்பது சட்டவிரோதமாகும்

# தமிழ் போதனா மொழி பல்கலைக்கழகம்

## 18 தமிழ்-முஸ்லிம் எம்.பி.கள் ஏகோபித்த கோரிக்கை

### பிரதமரிடம் எஸ். ஜே. வி. மகஜர்; மூதூர் மஜீத், கல்குடா எம். பி. ஆதரவு

(நமது நிருபர் நடராஜா)

கொழும்பு, திங்கள்

தமிழ் மொழியைப் போதனு மொழியாகக் கொண்ட பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளும் மகஜர் ஒன்றை வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பதினெட்டு தமிழ் எம். பி.க்கள் கைச்சாத்திட்டு இன்று பிற்பகல் பிரதமர் திரு டட்லி சேனநாயகாவிடம் சமர்ப்பித்தனர், இந்த மகஜரின் பிரதியொன்று கல்வி மந்திரியிடமும் சமர்ப்பிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மூதூர் இரண்டாவது எம். பி ஜனுப் ஏ எல் ஏ மஜீத் ஐக்கியதேசியக்கட்சியைச் சேர்ந்த கல்குடா எம் பி திரு டேபிள்யு தேவநாயகம் நிந்தவூர் எம் பி ஜனுப் முஸ்தபா ஆகியோரும் பொத்துவில் சுயேச்சைப் பிரதிநிதி அப்துல் மஜீத் மற்றும் தமிழரசுக் கட்சி எம் பிக்களும் இந்த மகஜரில் கைச்சாத்திட்டுள்ளனர். பதினெட்டு எம் பிக்களின் சார்பில் தமிழரசுக்சு கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் இந்த மகஜரை சமர்ப்பித்தார் இப்பல்கலைக்கழகம் வடமாகாண மக்கள் சுலபமாகப் போய்வரக்கூடிய ஓர் இடத்தில் கிழக்குமாகாணத்தில் அமைக்கப்படவேண்டுமென்று இந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளது



கிழக்கு மாகாணத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவித்தருமாறு கோரி வடக்கு, கிழக்குமாகாணத்தை சேர்ந்த பதினெட்டு தமிழ் எம் பிகள் பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்காவிடமும் கல்வி மந்திரி திரு ஐ எம் ஆர் ஏ இரியகொல்லையிடமும் மகஜர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

இம்மகஜரில்ஐக்கியதேசிய கட்சியைச் சேர்ந்த இரு எம். பி.க்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒரு எம் பி உள்ளிட்டு வடக்கு, கிழக்கு மாகாணத்தைச்சேர்ந்த 18எம் பிக்கள் கையெழுத்திட்டுள்ளனர். இம்மகஜர் இன்று பிற்பகல் சமர்ப்பிக்கப்பட்டது.

இம்மகஜரை தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் சமர்ப்பித்தார்.

### தேசிய பல்கலைக்கழகம்

இப்பொழுதுள்ள இலங்கைப் பல்கலைக்கழகங்கள் தேசிய பல்கலைக்கழகங்களாகப் பராமரிக்கப்பட்டு தேசிய ஐக்கியத்தைக் கருத்திற் கொண்டு சிங்களத்தையும், தமிழையும் இப்பல்கலைக்கழகங்களில் போதனு மொழிகளாக்க வேண்டுமென்றும் தமிழ் மொழியை மட்டுமே போதனு மொழியாகக் கொண்ட தமிழ்ப் பல்கலைக்கழகமொன்றை விரைவில் நிறுவ நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றும் இம்மகஜரில் கையெழுத்திட்ட பதினெட்டு எம் பிக்களும் கோரியுள்ளனர்.

### பல்கலைக்கழக இருப்பிடம்

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் சுலபமாகப் போய்வர வசதியளிக்கும் வகையில் கிழக்குமாகாணத்தில் இத்தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென்றும் இவர்கள் கோரியுள்ளனர்.

வித்தியலங்கார வித்தியோதய பல்கலைக்கழகங்களைத் தேசிய பல்கலைக்கழகங்களாக மாற்றி இப்பல்கலைக்கழகங்களில் சிங்களத்தைப்போதனு மொழியாக்குவதென்றும் அநுராதபுரத்தில் பௌத்த பிக்குகளுக்காகப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதென்றும் அரசாங்கம் மேற்கொண்ட முடிவுகள் குறித்து பதினெட்டு எம். பி.க்களும் இம்மகஜரில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### எஸ். ஜே. வி கருத்து



மகஜரில் கையெழுத்திட்டவர்கள் சார்பில் தமிழரசுக் கட்சித்தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தெரிவிக்கையில்சிங்களத்தை மட்டுமே போதனுமொழியாகக் கொண்ட இரண்டு பல்கலைக்கழகங்கள் இப்பொழுதிருக்கையில் தமிழ்மொழியைமட்டும் போதனுமொழியாகக்கொண்ட தமிழ்ப்பல்கலைக்கழகமொன்றை நிறுவித்தருமாறு தமிழ் பேசும் மக்கள் அரசாங்கத்தைக் கோருவது நியாயமானதே. என்று கூறினுர்

வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களின் ஏகமனதான ஆதரவு தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு உண்டு என்று தெரிவித்த திரு. எஸ்.ஜே வி. செல்வநாயகம், தமிழ்ப் பேசும் மக்களின் கலாச்சாரக் கல்வியையும் மொழித் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும் என்றும் கூறினுர்.

### சமயக் கல்வி

உலகின் பெரும் சமயங்களைப் பற்றிய சமயக்

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ்நகரில் அதிகரிக்கும் திருடர் நடமாட்டம்

### பொலிசாரிடம் ஒருவர் சிக்குண்டார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண நகரில் கடந்த ஒருவார காலமாக நடைபெற்று வரும் திருட்டு சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களை கண்டுபிடிப்பதில் பொலிசார் தீவிர கவனம் செலுத்திவருகின்றனர். பொலிசாரின் வேட்டை முழுப்பயன் அளிக்கவில்லையாயினும் நேற்றிரவு திருட்டு முயற்சியில் ஈடுபட்ட ஒருவர் பொலிசாரிடம் சிக்கியுள்ளார். இவர் ஒரு வீட்டு அறையில் இருந்த துணிகளை 'கொக்கைத்தடி'யின் உதவியுடன் திருடிக்கொண்டிருந்த சமயம் பிடிபட்டார். குறிப்பிட்ட நபர் இப்பொழுது யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் திருடர்கள் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், பொதுமக்கள் இரவு 10 மணிக்குப்பின்வீதியில் செல்வதற்குப் பயப்படுகிருர்கள்.

நேற்றுமுன்தினம் இரவு காங்கேசன்துறை வீதியில், சாரமும் சேட்டும் அணிந்து கொண்ட இருவர் தங்களை பொலிஸ்காரர்கள் எனக் கூறிக்கொண்டு இருமாணவர்களைத் தாக்கியதாக அறியப்படுகிறது.

15 வயதான ஆத்மலிங்கமும் அவரது நண்பனும் இரவு 10 மணிக்கு காங்கேசன்துறை வீதியால், தங்கள் வீடுகளுக்குச்சென்றுகொண்டிருந்த பொழுது, அவ்வீதியால் வந்த இருவர், அவர்களிடம் பல கேள்விகளைக் கேட்டபின் தாக்கியதாக மேலும் அறியப்படுகிறது.

அச்சமயம் அவ்வீதியால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் அற்றண்டன்ற் ஒருவரும் அவருடைய மகளும் சென்றதாகவும், அவர்களும் இச்சம்பவத்தை நேரில் கண்டதாகவும் கூறப்படுகிறது.

### சங்கானையில்

சங்கானையில் நேற்று முன்தினம், வீட்டில் காயப்போட்டிருந்த வேட்டியையும் சாறியையும் திருடிச் செல்லும்பொழுது ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். அவரைச் சங்கானைப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

## ஜி. ஜி. குறுக்கு விசாரணையில் உணவு அதிகாரி மூர்ச்சை

கொழும்பு, திங்கள்

அப்துல்ஹுசேன் ஜபார்ஜி ஸ்தாபனத்தாருக்கெதிராக பருப்பு விற்பனை சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்கில் இன்று சாட்சியமளிக்க வந்த உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு. ஏ. எஸ். சுந்தரமூர்த்தி மீண்டும் மயக்கமுற்று வீழ்ந்தார். எதிரிகள் தரப்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு ஜி ஜி பொன்னம்பலம் குறுக்கு விசாரணை செய்கையிலேயே அவர் மயக்கமுற்ருர். இவர் முதல் தடவையாக சாட்சியமளிக்க வந்தபோதும் மயக்கமுறருர் என்பது குறிப்பிடத்தக்கது.

சாட்சி மயக்கமுற்றதும் நீதிபதி திரு பி ஜி எஸ் டேவிட் வழக்கறிஞரைப் பார்த்து 'நீங்கள் சாட்சிக்கு என்னசெய்கிறீர்கள் என்றே தெரியவில்லை. வேறுயாரையும் குறுக்கு விசாரணை செய்யவிட்டால் என்ன?' என்று கேட்டார். அதற்கு திரு பொன்னம்பலம் பதிலிக்கையில் 'அப்படியானுல் நான் நீதிமன்றத்தைவிட்டு வெளியேறவேண்டியிருக்கும் என்று பதிலளித்தார். சாட்சி மயக்கம் தெளிவுற்றபின்னர் மீண்டும் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்

## கட்டைவேலி கிராமசபை கலைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்.

கட்டைவேலி கிராமசபை கலைக்கப்பட்டுவிட்டது. அதன் நிர்வாகப் பொறுப்புக்களை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நேற்று ஏற்றுக்கொண்டார்.

கட்டைவேலி கிராம சபையை உடனடியாகக் கலைத்துவிடுவதற்கான உத்தரவை ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர் நேற்றுப் பிறப்பித்தார். கட்டைவேலி கிராம சபையின் நிர்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பசி, பயம், பலாத்காரம், பட்சபாதம் என்ற தீமைகளை விலக்குவதும் அமைதி, ஆரோக்கியம், அறிவு, ஆனந்தம் ஆகிய நன்மைகளைப் பெருக்குவதும் முக்கிய கடமைகளாகும்!

— க. சந்தானம்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna, Phone: 387

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 11 உ (24-5-66)


## செய்தித் தணிக்கை

அவசரகாலநிலை நீடிப்பதுபற்றி ஜனப்பிரதிநிதிகள்சபையில் நடைபெற்ற விவாதத்தின்போது பத்திரிகைச் செய்தித் தணிக்கைபற்றி எதிர்க்கட்சியினர் தெரிவித்த புகாருக்கு பிரதமர் பதிலளிக்கையில், பத்திரிகைகள் தாங்களாகவே தமது செய்திகளைத் தணிக்கை செய்தது நல்லதென்றும் வகுப்புத் துவேஷத்தைத் தூண்டி நாட்டின் அமைதியைக் கெடுக்காமலிருப்பதற்காகவே பத்திரிகைச் செய்தித் தணிக்கை கொண்டுவரப்பட்டுள்ளதென்றும் கூறியிருந்தார்.

தேசிய ஒருமைப்பாட்டைப் பேணவும் நாட்டின் அமைதியைப் பாதுகாக்கவும் பத்திரிகைகளின் பொறுப்பு அதிகம். அரசியல் காரணங்களுக்காக சில பத்திரிகைகள் பொறுப்பற்ற முறையில் இங்கு செய்திகள் வெளியிடுவதும் எழுதுவதும் சகஜம். நாட்டில் அமைதி குலைந்து கொந்தளிப்பான நிலைமை ஏற்படும் சமயத்தில் பத்திரிகைகளின் பொறுப்பும் கடமையும் வேறெவருக்கும் குறைவானதல்ல. துரதிர்ஷ்டவசமாக இந்நாட்டிலுள்ள சிலபத்திரிகைகள் தமது பொறுப்பையும் கடமையையும் சரியாக உணர்ந்து கொள்வதில்லை இதன் விளைவாக செய்திகளுக்குத் தணிக்கை செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஆனால் செய்திகளைத் தணிக்கை செய்யும் தகுதி வாய்ந்த அதிகாரிகள் உண்மையிலேயே தகுதிவாய்ந்தவர்கள் தானா என்ற கேள்வியும் சில சமயங்களில் எழுகிறது. இது நியாயமான சந்தேகமே. 1958-ம் ஆண்டிலும் 1961-ம்ஆண்டிலும் அவசரகாலநிலை பிறப்பிக்கப்பட்டு செய்தித் தணிக்கையும் அமுலாக்கப்பட்டபொழுது செய்திகள் சரியான நேர்மையான முறையில் தணிக்கை செய்யப்படாததால், நாட்டில் எத்தகைய மோசமான நிலை தோன்றியதென்பதை அனைவரும் அறிவர். இப்பொழுது அவசரகாலநிலை அமுலிலிருக்கிறது. செய்தித் தணிக்கையும் அமுலிலுள்ளது. ''வகுப்புத் துவேஷத்தைத் தூண்டிவிடக்கூடிய செய்திகளைத் தணிக்கை செய்ய வேண்டியதுதான் ஆனால் சில பத்திரிகைகளில் இச்செய்திகள் தணிக்கை செய்யப்படுவதில்லை'' என்று எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் என். எம். பெரேரா ஜனப்பிரதிநிதிகள் சபையில் சுட்டிக்காட்டியதை பிரதமர் தமது கவனத்தில் கொள்வது நல்லது. வகுப்புவாதம் தேசிய ஒற்றுமையைக் குலைத்து நாட்டின் முன்னேற்றத்தையே சீரழித்துவிடும். ஆனால் 'ஜனநாயகம்' என்பதற்கு இங்கு ஒவ்வொருவரும் தமக்கேற்ற வகையில் விளக்கம் கூறுவதுபோல் வகுப்புவாதம் என்பதற்கும் ஆளுக்கொரு வியாக்கியானம் செய்கின்றனர். ஒருவரின் உரிமை பறிக்கப்பட்டதும், அவர் தமது இழந்த உரிமையைத் தரவேண்டுமெனக் கேட்பதை வகுப்புவாதம் என்று கூறும் விந்தையையும் இங்கு நாம் காண்கிறோம்.

பத்திரிகைத் தணிக்கை சில சமயங்களில் அவசியம்தான். செய்தித் தணிக்கையை அரசாங்கம் தனது பொறுப்பில் வைத்திருப்பது அதன் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றமுறையிலும் தனிப்பட்ட சிலரின் 'தகுதி'யைப் பொறுத்துமே செயல்படக்கூடும். பிரதமர் கூறியதுபோல் பத்திரிகைகள் தாங்களாகவே தங்கள் செய்திகளை, தேசிய ஒற்றுமையையும் நாட்டின் நலனையும் கருத்தில் கொண்டு, தணிக்கை செய்து கொண்டால், பத்திரிகைச் சுதந்திரத்தையும் பாதுகாக்க முடியும். இந்தியாவிலும் மற்றும் பல ஜனநாயக நாடுகளிலும் இருப்பதுபோல் பத்திரிகையாளர்கள் தமக்குள் ஒன்று சேர்ந்து ''பத்திரிகைச் சபை'' ஒன்றை அமைத்துக் கொண்டால் இங்கும் பத்திரிகைச் சுதந்திரத்தையும் பத்திரிகையாளரின் உரிமைகளையும் பாதுகாக்கவும் அதிக வாய்ப்பு ஏற்படும். பத்திரிகைச் சபை பத்திரிகைகளுக்கென, நாட்டின் நலனையும் தேசிய ஒற்றுமையையும் பாதுகாக்கக்கூடிய நெறிமுறைக் கோட்பாடு ஒன்றையும் உருவாக்கி அதன்படி செயல்பட்டால் அரசாங்கத்தின் அனாவசியத் தலையீடுகளுக்கு இடமேற்படாததுடன், அவசரகாலநிலையிலும் மற்றும் சாதாரண சமயத்திலும் பத்திரிகைகளுக்கு ''வாய்ப்பூட்டு''ப் போட்டுப் பழி வாங்கவும் எந்த அரசாங்கத்துக்கும் வாய்ப்புக் கிடைக்க இடமிராது.

வல்வெட்டி

### வேவில்பிள்ளையார் உற்சவம்

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டி வேவில் பிள்ளையார்கோவில் உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

பூங்காவனம் இம் மாதம் 30-ம் திகதியும், தேர்த்திருவிழா அடுத்தமாதம் 2-ம்3ம் திகதிகளிலும் நடைபெறும்.

### கி. ச. தேர்தலில் எம். பி.

மஹரா, திங்கள்

நறன்வல கிராமசபை தேர்தல் ஜூன் மாதம் முதலாம் திகதி நடைபெறவிருக்கிறது. மஹரா எம். பி. திரு. எஸ். கே. சூரியாராச்சி சுதந்திரக்கட்சி சார்பில் கோனகெள என்ற வட்டாரத்திற்கு போட்டியிடுகின்றார்.

பெப்ரவரி சதி

## சந்தேக நபர்களுக்கு மட்டும் புதிய சட்டங்களா?

### - பார்லிமெண்டில் -

கொழும்பு, திங்கள்

நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு ஜனப்பிரதிநிதிகள் சபை மீண்டும் சபாநாயகர் சேர் அல்பேர்ட் பீரிஸ் தலைமையில் கூடியது.

போக்குவரத்து மந்திரி உள்நாட்டு தொலைபேசித் தொடர்புகள் திருத்தமசோதாவை சபையில் தாக்கல் செய்தார். கொழும்பு தவிர்ந்த மற்றைய இடங்களில் பழைய தொலைபேசித் தொடர்புமுறையிலே அவை இயங்கிவருவதாகவும், இவற்றை விரைவில் மாற்றியமைக்காவிடில் அவை 3 அல்லது நாலு வருடங்களில் முற்றிலும் பழுதடைந்துவிடும் எனவும் மந்திரி தெரிவித்தார். மைக்கிரோ அலை வரிசை அடிப்படையில் ஒவ்வொரு நகரத்துக்குமிடையே தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்த இப்பொழுது அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாகவும் மந்திரி தெரிவித்தார்.

### தொலைபேசி ஒற்றுக்கேட்டல்

தொலைபேசி ஒற்றுக்கேட்டல் பற்றி மந்திரி பிரஸ்தாபித்தார். தொலைபேசி ஒற்றுக்கேட்டல் பற்றி திரு. என். கியு. டயஸ் பிரதமமந்திரிக்கு எழுதியிருப்பதாகவும், முன்னுள் பிரதமரிடம்தான் இது பற்றி பிரஸ்தாபித்ததையும் திரு. டயஸ் அந்தக்கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாக மந்திரி தெரிவித்தார்.

### அவசரகால நிலைமை

சபை சனிக்கிழமை கூடியபோது அவசரகால நிலைமை பற்றி காரசாரமான விவாதம் நடைபெற்றது.

பெப்ரவரிமாத சதிமுயற்சி பற்றி டாக்டர் என். எம். பெரேரா பிரஸ்தாபித்தார். முன்னர் நடைபெற்ற சதிமுயற்சியில் சம்பந்தப்பட்டவர்களுக்கு சகல வசதிகளும் அளிக்கப்பட்டதாகவும், ஆனால் இப்போது சதியில் சந்தேகிக்கப்பட்டவர்களுக்கு போதிய வசதி எதுவும் அளிக்கப்படவில்லையென்றும் டாக்டர் பெரேரா தெரிவித்தார். ''தற்போதைய சதிமுயற்சி பற்றி சந்தேகிக்கப்படுபவர்கள் ஏழைகள் என்றதால் அவர்களுக்கு எவ்வித வசதியளிக்கக்கூடாதென்ற சட்டம் எதுவும் இருக்கிறதா என்றும் டாக்டர் பெரேரா உணர்ச்சியுடன் கேட்டார். பௌத்த குருமார் அவர்களுக்கு 'பன்சில் தட்சணை' அளிக்கக்கூட அவகாசம் கொடுக்கப்படுவதில்லை என்றும் சந்தேகநபர்கள் தங்கள்குடும்பத்தினரையும், வழக்கறிஞர்களையும் காணக்கூட அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். இப்பொழுதுகூட சந்தேக நபர்களை பொலிசார் அடித்து துன்புறுத்துவதாகவும் இது அநியாயமானது என்றும் டாக்டர் பெரேரா கர்ஜித்தார்.

### அவசர கால நிலைமை எதற்கு?

திரு. பீட்டர் கெனமன் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில், ''பெப்ரவரி மாதம் நடைபெற்ற சதிமுயற்சியில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களைபற்றி விசாரணை நடத்தி அவர்கள் மீது வழக்குத் தொடருவதற்காகவே அவசரகால நிலைமை நீடிக்கப்படுவதாக பிரதமரும், ராஜாங்க மந்திரியும் தெரிவிக்கின்றனர், ஆனால் நடைமுறையில் எதிர்க்கட்சியினரின் ஜனநாயக நடவடிக்கைகளுக்கு ஊறுவிளைவிக்கவே அவசரகாலநிலைமையைப் பயன்படுத்துகின்றனர்'' எனக் குறிப்பிட்டார்.

ஜனவரி 8-ந் திகதி காலிபேஸ் மைதானத்தில் உயிர் நீத்த பௌத்த பிக்குவின் மரணம் பற்றி விசாரணை எதுவும் நடத்தப்பட்டதா? இதுபற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட மூன்று நிரந்தரக்

(5-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக் கடிதம்

## பல்கலைக்கழக நூல்களை அரசாங்கம் வெளியிடுமா?

இலங்கைப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் தேர்வுகளுக்குத் தோற்றுவதற்காக நாடெங்கும் உள்ள பலர் தம்மை வெளிவாரி மாணவர்களாகப் பதிவுசெய்துகொண்டு பயில்கின்றனர்.

தேர்வுக்குச் சொந்த மொழியில் தோற்றுவது வசதியானாலும் தேர்வுநாடிகள் பல இன்னல்களைத் தாண்டவேண்டியவர்களாக உள்ளனர். பல பாடங்களை தமிழிலே படிக்கத்தக்க நூல்கள் இல்லை. இந்திய அரசாங்கத்தாலும், இந்திய சர்வ கலாசாலைகளினாலும் வெளியிடப்பட்டு வருகின்ற சில நூல்களை வாங்கி வெளிவாரி மாணவர்கள் படிக்க முடியுமாயினும் சொற்பிரயோகங்களில் இடர்ப்பாடு உண்டு. ஒரே ஆங்கிலப் பதத்திற்கு இந்தியப் பாடநூற்புத்தகங்களில் ஒரு சொல்லும். இலங்கைப் பாடநூற்புத்தகங்களில்வேறு சொல்லும்எடுத்தாளப்படுவதைப் பரக்கக் காணமுடிகின்றது. பல வெளிவாரி மாணவர்களோ ஆங்கிலத்தில் வாசிக்கமுடியாதவர்களான காரணத்தால் ஆங்கில நூல்களிலிருந்தும் படிக்கமுடிவதில்லை. இப்பாடங்களுக்கான நூல்களைப் பல்கலைக்கழகமே எழுதிப் பிரசுரித்தால் இக்கஷ்டம் நீங்க ஏதுவாகும். பிரசுரிக்கும் நூல்களின் நிலையைக் குறைந்த அளவில் நிர்ணயிக்கமுடியுமாயின் வசதியாக இருக்கும். அன்றியும் வெளிமாணவர்கள் பங்குபற்றத் தக்க வகைகளில் சில உபந்நியாசங்களைச் செய்யலாம். தொடர்ந்து விரிவானமுறையில் பாட விஷய ஒழுங்கில் வானொலிப் பேச்சுக்களை ஒழுங்கு செய்யலாம். சிறப்பாகப் பல்கலைக்கழகத்தில் போதனைசெய்யும் பாடங்களை அப்படியே ஒலிப்பதிவு செய்து வானொலியில் ஒலிபரப்பினால் வெளிவாரி மாணவர்கள் பெரிதும் பயனடைவார்கள்.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கு அனுமதிக்கும்பட்சத்தில் தமிழ்மொழி மாணவர்கள் இந்தியப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றின் தேர்வுக்கு தோற்ற அனுமதிக்கப்படுவார்களானால் மிகவும் நன்மை பயப்பதாகும். சம்பந்தப்பட்டவர்களும், கல்விமான்களும் வெளிவாரி மாணவர்களின் விஷயத்தில் அக்கறைகாட்டுவார்களா?

ச. கதிரவேலு
செயலாளர்
இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரி தமிழ் மாணவர் கழகம்

### நாட்டிலும் நகரிலும்

அட்டமி நவமியில் ஒரு நல்ல காரியம் செய்யப்படாதென்ற பொது நம்பிக்கைக்கு என்ன காரணம் என்று சோதிடமும் வான சாஸ்திரமும் தெரிந்த ஒருவரிடம் விசாரித்தேன், அவர் அதை விளக்கப்படுத்தினார்.

பூமியில் ஆகர்ஷண சக்தி இருப்பது போலவே சந்திரனிலும்இழுக்கும் சக்தி இருக்கிறது. சந்திரனின் சக்தி பூமியை தாக்கும். அமாவாசை, அட்டமி நவமி, பௌர்ணமி காலங்களில் இந்த சக்தி அதிகமாக இருக்கும். இவற்றை கனத்தநாட்கள் என்று கூறுகிறோம். இந்நாட்களில் சீதோஷ்ண நிலையும், காற்று ஓட்டமும் கடல்அலைகளின் கொந்தளிப்பும் மாறுதலடையும். பூரணையில் கடல்அலைகள் குமுறி எழுந்து கும்மாளம் ஆடுவதையும் அமாவாசையில் அசைவின்றி அமைதியாயிருப்பதையும் காணலாம். அட்டமி நவமி நாட்களில் காலநிலையில் மாறுதல் உண்டாவது நிச்சயமாக காணக்கூடியதாக இருக்கிறது. மழைபெய்தால் வெளிக்கும், வெய்யில் எறித்தால் மந்தாரம் போடும். பேய்க்காற்று அடித்தால் திடீரென்று அமைதியாகும். இப்படி ஏதாவதொரு மாற்றத்தை பவனத்தில் காணலாம்.

இந்தமாற்றம் பஞ்சபூதங்களை மட்டுமன்றி இந்த உலகத்தில் வாழும் சகலஜீவராசிகளையும் தாக்குகிறது. விதைகள் முளைவிடுவதையும், மிருகங்களும் பறவைகளும் கருத்தரிப்பதையும் இக்காலங்களில் காணலாம். இதற்காகத்தான் எங்கோ ஒரு நாட்டில் மீன்பிடிப்பதும் மிருகங்கள் கொல்லப்படுவதும் அமாவாசை, பூரணை, அட்டமிநவமிகாலங்களில் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிருக்கிறது. சந்திரனுடைய இந்த சக்தியானது மனிதர்களையும் தாக்குகிறது என்பதை சொல்லவேண்டியதில்லை. பெண்களின் உடல் நிலையில் மாற்றம் உண்டாகிறது. உடலைத் தாக்கும் சக்தி நரம்புகளையும் மூளையையும் தாக்கலாமல்லவா.

இதனால்தான் பொதுவாக இந்த நாட்களில் புதுக்காரியங்களை ஆரம்பிக்கப்படாதென்று நமது முன்னோர்கள் அனுபவரீதியாகக்கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

ஆமையைப்போல ஒரு சாதுவான பிராணி உலகில் வேறொன்றுமில்லை யல்லவா? ஆனால் அந்த கண்கெட்ட கடவுள் ஆமையின் தடித்த ஓட்டுக்குள்ளே கொஞ்சம் சதையையும் படைத்துவிட்டான். அந்த சதையை உண்டு சுவைப்பதற்கு ஆறறிவு படைத்த மனிதன் ஆமையைக் கொல்லும் முறையைப் பார்க்கும்போது இரத்தக் கண்ணீர் வடிகிறது. ஆமை தன் அவஸ்தையை வெளிப்படுத்துவதற்கு குரலும் இல்லை. மௌனமாகஇருந்து பொறுத்துக் கொள்ளுகிறது.

ஆமையை மல்லாத்தி புரட்டிவிட்டால் அது செயலற்றுப் போய் விடுகிறது. மற்ற பிராணிகளுக்குள்ள எதிர்க்கும் சக்தியோ, எதிர்க்கக்கூடிய வல்லமையோ, ஆயுதங்களோ அதன் உடம்பில் கடவுளால் கொடுக்கப்படவில்லை. அப்படிப்பட்ட அப்பாவியைக்கொல்லுவதே அமானுஷ்யமானது. சரி, அப்படித்தான் அதன் இறைச்சி சில நோயாளிகளுக்கு நல்லதென்றால் அதைமனித தன்மையாகக் கொல்லப்படாதா? மல்லாத்தி வைக்கப்பட்ட ஆமை கால்களை

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பொருளாதார விருத்தியின்றேல் அரசியல் சுதந்திரம் நிலைக்காது"

## பம்பாய் கூட்டத்தில் திருமதி இந்திரா

## சீனாவை மீட்க சியாங் மீண்டும் கனவு!

### 4-வது தடவை தேசிய சீன ஜனாதிபதியாக தெரிவு

தைப்பே; மே22

1 கோடிக்கு மேற்பட்ட ஜனத்தொகையைகொண்ட தேசியசீனா எனப்படும் போர்மோஸாவின் ஜனாதிபதியாக மார்ஷல் சியாங்கை ஷேக் 4 வது தடவை தெரிவு செய்யப்பட்டார். சியாங்குக்கு வயது 78.

பழைய ராணுவ வீரர் எனத் தம்மை வருணித்துக் கொள்ளும் சியாங், 1948-ம் ஆண்டுமுதல் கடந்த 8 ஆண்டுகளாக ஜனாதிபதியாக இருக்கிறார். புதிய தெரிவு மூலம் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு அவர் தொடர்ந்து பதவி வகிப்பார்.

15 நாடுகளிலிருந்து அழைக்கப்பட்ட விசேஷ தூதுவர்களும், 2000 பிரபலஸ்தர்களும் அடங்கியகூட்டத்திற்கு முன் சியாங்கை ஷேக் பிரமாணம் எடுத்துக்கொண்டார். பதவிப்பிரமாணத்திற்குப்பின் சியாங் தைப்பே நகரமண்டப உப்பரிகையில் தோன்றி, 2,00,000 மக்களுக்கு தரிசனமளித்தார்.

அவர் பதவி ஏற்ற அன்று தலைநகரில் ஒரு நாள் விடுமுறை அளிக்கப்பட்டது,

பதவியை ஏற்றபோது அவர்நிகழ்த்திய பிரசங்கத்தில் சீனாவில் மாஸேதுங் ஆட்சியை ஒழித்துக்கட்டி, அங்கு மீண்டும் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தும் முயற்சியைத் தொடரப்போவதாய்க்கூறினார்.

''தாய்வானிலுள்ளதேசியவாதிகளும், பிரதான பூமியிலுள்ள கம்யூனிஸ்டுகளும் ஒரே குடையின்கீழ் ஒன்று சேரமுடியாது. எங்களது 6 லட்சம் துருப்புக்கள் 30 லட்சம் மாஸேதுங்கின் துருப்புக்களை எதிர்த்து போராடும். மாஸேதுங்கின் வீரர்கள் 30 லட்சம் பேரும் 30 லட்சம் கருத்து வேற்றுமை கொண்டிருக்கிறார்கள். ஆனால் எனது 6 லட்சம் வீரர்கள் ஒருமனிதனைப் போல் போராடி சீனப்பெரு நிலத்தை விடுவிப்பார்கள் என்றும் சியாங் கூறினார். (பி.டி.ஸி.)

## சைபீரியாவில் நவீனநகரம்!

### ரஷ்யா நிர்மாணிக்கும்

மாஸ்கோ, மே 23

வட சைபீரியாவில் முற்றிலும் மூடப்பட்ட ஒரு நகரத்தை நிர்மாணிக்க சோவியத் யூனியன் முடிவு செய்துள்ளதாக ''டாஸ்'' செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

வட சைபீரியாவில் உள்ள யக்குட்றியா என்னும் இடத்தில் வருடத்தில் 270 நாட்களும் ஒரே பனி. இதனால் அங்கு மிகச் சில மக்களே வாழுவதுடன் பெரிதும் கஷ்டமடைகிறார்கள். இந்த இடத்தில் ஒரு நவீன நகரத்தை நிர்மாணிக்க சோவியத் யூனியன் முடிவு செய்துள்ளது. இந்த நகரத்தில் வாழ்பவர்கள் பனிக்கட்டியில் நடக்காமல் இருப்பதற்கு நிலத்தை மூடி மூடுபாகை போட்டு, இயந்திர சாதனங்கள் பனி உற்பத்தி தடுக்கப்படும். ஒவ்வொரு கட்டிடமும் ஒன்பது மாடிகளைக் கொண்டதாய், 75 ஏக்கருக்கு மாடிகள் கட்டப்பட்டு அவை நகரின் மத்தியில் உள்ள பண உற்பத்தி தடுப்பு இயந்திரம் கொண்ட மாடிக்கு இணைக்கப்படும்.

நிலத்தை மூடிப் போடப்படும் மூடுபாகைகள் இயந்திரம் மூலம் சூடாக்கப்பட்டு 50 சென்டிகிறேட் பாகையில் பனிக்கட்டிகள் உண்டாவது தடுக்கப்படும்.

இந்நகரத்துக்கு 'டெப்புட்டாங்கி' எனப் பெயரிடப்படும் என டாஸ் தெரிவித்துள்ளது. (பி. டி. ஸி)

## பிரான்ஸ் 4 அணு குண்டு சோதனை நடத்தும்

பாரிஸ், மே 23

இந்த கோடைக்காலத்தில் பசிபிக் சமுத்திரத்தில் பிரான்ஸ் நான்கு அணு சோதனைகளை நடத்தும்.

இவ்விஷயமாக எவ்வித அபிப்பிராயமும் தெரிவிக்க பிரஞ்சு பாதுகாப்பு அதிகாரிகளும், வெளிநாட்டு மந்திரியும் மறுத்துவிட்டார்கள்.

கப்பல்களுக்கும், விமானங்களுக்கும் இச்சோதனைப் பகுதியிலிருந்து விலகியிருக்குமாறு பிரஞ்சு அரசாங்கம் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

நீருக்கு மேல் மூன்று சோதனைகளும் நீருக்கடியில் ஒரு சோதனையும் நடத்தப்படும்.

ஒன்றன்பின் ஒன்றாக நான்கு சோதனைகளும் நடத்தப்படும்.

## இதுதான் இறுதி முடிவு

— கவுண்டா

லுசாகா, மே 23

ரொடீஷியா பற்றி முழுப் பொறுப்பும் பிரிட்டனுடையதே என ஜனாதிபதி கவுண்டா தெரிவித்துள்ளார். ரொடீஷிய- சாம்பிய புகையிரத கூட்டுஸ்தாபனத்தினர் இயற்றியுள்ள புதிய முறையை சாம்பியா ஏற்றுக்கொள்ளாதெனவும் இது சாம்பியாவின் இறுதி முடிவு எனவும் அவர் தெரிவித்தார். (பி. டி. ஸி)

## டானாங்கில் மீண்டும் சண்டை

சைகோன், மே 23

தென்வியட்னாமின் கரையோரப் பகுதி நகரமான டானாங்கில் நேற்று மீண்டும் கிளர்ச்சித்துருப்புக்களுக்கும் அரசாங்கத்துருப்புகளுக்குமிடையில் கடும் சண்டை மூண்டது. இச்சண்டையில் கிளர்ச்சித்துருப்புக்கள் அதிக நஷ்டமடைந்ததாகத் தெரிகிறது. கிளர்ச்சித் துருப்புக்களின் நாற்பது சடலங்கள் பௌத்த ஆலயத்தில் இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

சைகோனில் ஒரு எறிகுண்டு வீச்சுச் சம்பவத்தில் மூன்று பத்திரிகை நிருபர்கள் காயமடைந்தனர்.

## தமிழ்நாட்டு செய்திகள்

அரியமங்கலத்துக்கு அருகில் கார்விபத்து ஒன்றில் சிக்கிய நிலக்கோட்டை நகர பஞ்சாயத்துத் தலைவர் திரு. சங்கர் திருச்சி ஆஸ்பத்திரியில் காலமானார். இவ்விபத்தில் கார் சாரதி ஸ்தலத்திலேயே மாண்டார். இவ்விபத்தில் காயமடைந்த ஸ்ரீமதி ஏ. எஸ். பொன்னம்பாள் எம். எல். ஏ; சகோதரி சரஸ்வதி, தந்தை சின்னச்சாமிஆகியோர் குணமடைந்துவருகின்றனர்.

ஃ ஃ ஃ

ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட கணவர் இறந்து விடுவார் என்று 'தெருச்சோதிடர்' ஒருவர் ஆருடம் கூறியதால் மனமுடைந்த மனைவி குப்பம்மாள் தன்னுடலில் தீமூட்டிமாண்டார்.

ஃ ஃ ஃ

கோவையில் சின்னய்யன் என்ற கடைக்காரர் தமது கடையில் திருட்டுப்போனது சம்பந்தமாக நான்கு சிறுவர்களைப் பிடிததுவலுக்கட்டாயமாக மொட்டை அடித்ததைத் தொடர்ந்து கடைக்காரரும் மற்றும்ஆறுபேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஃ ஃ ஃ

அபதினான்கு இந்திய மொழிகள் அனைத்திலும் மத்திய அரசாங்க உத்தியோகப் பரீட்சைகளைநடத்துவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது.

ஃ ஃ ஃ

பெரியமேடுவேப்பேரிஹைறோடில் கடைவைத்திருக்கும் குஞ்சுராமன் நாயர் ஒரு பெண்ணுக்குப் பொருள்கள் கொடுத்துக் கொண்டிருந்தபோது சக்தி என்பவர் குஞ்சுராமன் நாயரின் மூக்கை அறுத்துக் காயப்படுத்தினாராம்.

## கொங்கோவில் பூமியதிர்ச்சி

லியட்போர்ட்வில்லி, மே. 23

வடகிழக்கு கொங்கோவில் சென்ற புதன்கிழமை ஏற்பட்ட திடீர் பூமியதிர்ச்சியால் 90 பேர் இறந்தார்கள் எனவும் நூற்றுக்கணக்கானோர் வீடிழந்தனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கொங்கோவின் கிழக்கு நகரமான பொக்கோவாவில் இத்திடீர் பூமியதிர்ச்சி ஏற்பட்டதெனவும் அண்மையில் இங்கு ஏற்பட்ட பூமி அதிர்ச்சிகளில் இது நீண்ட நேரம் நீடித்ததென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி.டி.ஸி)

## "பிரிட்டனை வெளியேற்ற முயற்சிப்பேன்"

லுசாகா, மே 23

ரொடீஷியாவின் புதிய ஆட்சியை அடுத்த காமன்வெல்த் மகாநாட்டுக்கு முன்னர் பிரிட்டன் முறியடிக்காவிட்டால் காமன்வெல்த்திலிருந்து பிரிட்டனை வெளியேற்றக்கோரும் பிரேரணையை தான் கொண்டுவரப்போவதாக சாம்பிய ஜனாதிபதி திரு. கவுண்டா தெரிவித்துள்ளார். (பி. டி. ஸி)

பம்பாய், மே 23

''நாட்டின் பொருளாதாரத்தை நாம் விரைவாக விருத்திசெய்தாலன்றி நமது அரசியல் சுதந்திரம் உறுதியா இருக்கமுடியாது'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்றுமாலை இங்கு சௌபாத்தி மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

''சென்ற பதினெட்டு ஆண்டு காலத்துக்குள் இந்தியா பல்வேறு துறைகளிலும் மகத்தான முன்னேற்றமடைந்துள்ளதென்பது உண்மையே. ஆயினும் நாம் இன்னும் பல துறைகளிலும் அதிக முன்னேற்றமடைய வேண்டியவர்களாக இருக்கிறோம்'' என்று திருமதி காந்தி கூறினார்.

இன்று இந்தியர்கள் தங்கள் முழுச்சக்தியையும் விவசாயத்திலும் அபிவிருத்தியிலுமே செலவிட வேண்டியவர்களாக இருக்கிறார்களென்றும் விஞ்ஞான ரீதியில் உற்பத்தியைப்பெருக்க வேண்டியது அவசியமென்றும் கூறிய திருமதி காந்தி, இந்தியர்கள் தமது உழைப்பிலும் திறமையிலும் நம்பிக்கை கொள்ளவேண்டுமென்றார்.

மைசூர் மகாராஷ்டிர எல்லைப் பிரச்னை பற்றியும் அதுபற்றி பம்பாயில் மகாராஷ்டிரா முதன் மந்திரியின் இல்லத்தின்முன் சில எதிர்க்கட்சித் தலைவர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்திருப்பதுபற்றியும் திருமதி இந்திரா குறிப்பிட்டுராஜ்ய எல்லைப்பிரச்னைகளுக்கு நியாயமான தீர்வுகாண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றனவென்றும் இப்பிரச்னையில் எவரும் தம்மைத்தாமே வருத்திக் கொள்ளவேண்டிய அவசியமில்லையென்றும்கூறினார்.

### உண்ணா ரதிகளை சந்தித்தார்

இதற்குமுன், எல்லைப்பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணவேண்டுமெனக் கோரியும் இப்பிரச்னைக்கு துரிதமாகத் தீர்வுகாணத் தவறியதை ஆட்சேபித்தும் மகாராஷ்டிர முதன் மந்திரி திரு. வி. பி. நாயக்வீட்டின் முன் உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கும் மைசூர் சட்டசபை அங்கத்தவர், மகாரஷ்டி ஏக்கரன் சமிதி தலைவர் திரு. சுந்தரங்கச் சேனபதி ராத், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ஜே. எம். ஜோஷி, திரு. நாதபாய், திரு. கே. என். டோலத் ஆகியோரை திருமதி இந்திரா காந்தி சென்று சந்தித்து, ராஜ்ய எல்லைப் பிரச்னைக்கு விரைவில் சுமுகமான தீர்வுகாணப்ப மென வாக்குறுதியளித்தார். ''இப்பொழு நாட்டில் பல பிரச்னைகள் உள்ளன. இவற்றைத் தீர்ப்பதில் முயற்சிசெய்து வருகிறேன். மேலும் மேலும் பிரச்னைகளை ஏற்படுத்தாதீர்கள்'' என அவர்களை திருமதி இந்திரா கேட்டுக் கொண்டார்.

நேற்றிரவு மைசூர், மகாராஷ்டிர முதன் மந்திரிகளையும் காங்கிரஸ் தலைவர்களையும் திருமதி இந்திரா சந்தித்து, மைசூர் மகாராஷ்டிரஎல்லைப்பிரச்னை பற்றி ஆலோசனை நடத்தினார்.

## "மக்கள் விரும்பாவிடில் வெளியேறுவேன்" — இந்திரா

பம்பாயில் நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் நேற்றைய கூட்டத்தில் பேசிய பிரதமர் திருமதி இந்திராகாந்தி, ஒரு கட்டத்தில், தம்மை மக்கள் விரும்பாவிடில் தமது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு வெளியேறத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

''காலஞ்சென்ற பிரதமர் திரு. ஜவஹர்லால் நேருவின் கொள்கைகளையே பின்பற்றி வருகிறோம். இக்கொள்கைகளே இன்று நமது நாட்டுக்கு ஏற்றதெனவும் கருதுகிறோம். நாட்டின் நலனுக்கு இக்கொள்கைகள் ஏற்புடையன அல்லவென வருங்காலத்தில் தோன்றினால், அவற்றை மாற்றிக் கொள்ளத் தயங்கமாட்டேன்'' என்று கூறினார்.

நேற்றிரவு முதன் மந்திரி வீட்டை நோக்கிச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர் 88 பேர் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

## மீஸோ நிலை பற்றி ஆலோசனை

ஷில்லாங், மே 23

மீஸோ கிளர்ச்சிநிலைபற்றி நேற்று ஷில்லாங்கில் இந்திய மத்திய அரசாங்க உயர்தர அதிகாரிகள், அஸ்ஸாம் ராஜ்ய உயர்தர அதிகாரிகள், ராணுவ அதிகாரிகள் ஆகியோருக்கிடையில் ஆலோசனை நடைபெற்றது. கிளர்ச்சிக்காரரின் எதிர்ப் பிரசாரத்தை முறியடிப்பது, உணவுப் பொருள்கள் விநியோகத்தை துரிதப்படுத்துவது போன்ற முக்கிய விஷயங்கள் பற்றி ஆலோசனை செய்யப்பட்டது.

## செயற்கை இருதயம்

டெக்ஸாஸ், மே 23

பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட செயற்கை இருதயம் பொருத்தப்பட்ட வால்டர் மக்காள்ஸ் என்ற 61வயது மாலுமி இன்று மரணமானார். செயற்கை இருதயத்தில் எவ்வித பிழை இல்லை என்றும் மூன்று நாட்களுக்கு முன்பு அவருடைய இயற்கையான இருதயத்தின்மீது நடந்த சத்திர சிகிச்சையை தொடர்ந்து உண்டான இரத்தப் பெருக்குதான் மரணத்துக்கு காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சரித்திரத்திலேயே முதல் முறையாக செயற்கை இருதயம் பொருத்தப்பட்ட மார்ஷல் டெறுடர் என்பவரும் சத்திர சிகிச்சை நடந்த 5-ம் நாள் கடந்த ஏப்ரல் மாதம் 25-ந் திகதி மரணமடைந்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்தலஸ்தாபன தேர்தல்கள்

யாழ்ப்பாணம். செவ்.

மூகமாலை கிராம சபை தேர்தல் இம்மாதம் 28-ம் திகதியும். சுழிபுரம் கிராம சபை தேர்தல் இம்மாதம் 30-ம் திகதியும் நடைபெறும்.

வல்வெட்டித்துறை பட்டின சபை தேர்தலும், புலோலி கிராம சபை தேர்தலும் ஜூன் மாதம் 1-ம் திகதிநடைபெறும்.

## கோப்பாய் எம். பி.

யாழ்ப்பாணம், செவ்.

மலேசியா சென்ற கோப்பாய் எம் பி. திரு. எஸ்' கதிரவேற்பிள்ளையும் அவரது பாரியாரும் தற்பொழுது இந்தியாவில் தங்கியுள்ளனர். இலங்கைக்கு இம்மாதம் 8-ந் திகதி விமானத்தில் புறப்படுவார்கள்,

## பெற்ரூர்தின விழா

யாழ்ப்பாணம், செவ்.

தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலைப் பெற்ரூர்தின விழாவும், திருவியவர்தின விழாவும் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாண வளர்ந்தோர் கல்வி பொறுப்பதிகாரி திரு. சி. ஆறுமுகவடிவேல் விழாவுக்குத் தலைமைவகிப்பார்.

## இசைவிழா

மாத்தளை, திங்கள்

மாத்தளை இசைக்கலா மன்ற ஆதரவில் இம்மாதம் 25-ம், 26-ம் திகதிகளில் இசைவிழா நடைபெறவிருக்கிறது. மாத்தளை இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும் இவ்விழாவின் முதலாம்நாள் நிகழ்ச்சிகளுக்கு திரு. பி முத்தழகும், இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு திரு. கு. சிவசுப்பிரமணியமும் தலைமை வகிப்பார்கள்.

## மாலைதீவில் நியமனம்

ஊர்காவற்றுறை, திங்கள்

கொழும்பு அரசினர் கலைக் கல்லூரியில் கல்வி பயின்று பட்டம்பெற்ற நெடுந்தீவை சேர்ந்த திரு. ரி. சுவாம் பிள்ளை மாலைதீவில் இம் மாதம் 15-ம் திகதி தொடக்கம் ஓவியசிற்ப ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளார்.




## "அரசாங்கத்தை எதிர்பார்க்காதீர்"

கொழும்பு திங்கள்

பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் கல்விச்செலவை அரசாங்கத்திடம் விட்டுவிடுவது தவருனது. அவர்கள் பயிலும்போதே வேலை செய்து உழைத்துக் கல்விக்காகச் செலவிட வேண்டும் என்று கல்விஅமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் ஆனந்தகுருகே கிங் ஜோஜ் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினுர்.

## அதிகாரிகள் ஆட்சி

கண்டி, திங்கள்

'ஜனநாயக ஆட்சிக்குநாம் ஆதரவு கொடுத்தோம். ஆனுல் இன்று அதிகாரிகள் ஆட்சியே நாட்டிலே தாண்டவமாடுகிறது' இவ்வாறு கண்டி புசலாவ தோட்ட துரைமார் சங்க ஆண்டு விழாவில் திரு. வ. வருசவிரத்தின பேசும்பொழுது குறிப்பிட்டார்.

திரு. வருசவிரத்தின மேலும் பேசுகையில்குறிப்பிட்டதாவது:—

தேயிலை, றப்பர், தெங்கு ஆராய்ச்சி நிலையங்கள் தற்பொழுது அரசாங்கத்தினுல் பொறுப்பேற்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சி நிலையங்களில் வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் சம்பளம் பற்றி திறைசேரிக்கும் இந்த நிலையங்களுக்குமிடையில்பெரும் பிரச்னையாக இருந்தது. காலஞ்சென்ற பிரதமர் திரு. டி எஸ். சேனநாயகா தான் இந்த நிலையங்களை உருவாக்கினுர். ஆனுல்சிலர் தங்கள் நோக்குகளுக்கமைய சில மாற்றங்களை இந்த நிலையங்களில் ஏற்படுத்தியுள்ளனர் என்ரூர்.

## பதவி ஏற்றனர்

சுழிபுரம், திங்கள்

வட்டு மேற்கு செம்பாட்டம் தோட்டம் இளைஞர் முன்னேற்றச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் சங்க அலுவலகத்தில் சென்ற வாரம் நடைபெற்றது.

நடப்புவருட உத்தியோகத்தர் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:- தலைவர்: திரு. ஆ. சண்முகம், உபதலைவர்: திரு. மு சபாபதி, காரியதரிசி: திரு. வ. மார்க்கண்டு, உபகாரியதரிசி; திரு. அ. இராசேந்திரன். தனுதிகாரி: திரு. க. இராசையா, உபதனுதிகாரி: திரு. வ. கணேஷ். எண்மர்கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## ஒழுங்கற்ற முறையில் நடந்தவருக்கு அபராதம்

காலி, திங்கள்

குடித்துவிட்டு, பஸ்ஸில் ஒழுங்கற்ற முறையில்நடந்துகொண்டாரென கெப்பெற்றியகொடாவைச் சேர்ந்த ஈ பிரான்ங் வணிகசேகரா மீது நாகொட பொலிஸாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு உடுஹக மாஜிஸ்திரேட் திரு. ரி. பி. சேனநாயக்கா நூறுரூபாய் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## இலங்கை திரும்பினுர்

சுழிபுரம், திங்கள்

வடபகுதி கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களில் ஒருவரான திரு, ஐ. ஆர், அரியரத்தினம் ரஷ்ய நாட்டுச் சுற்றுப்பிரயாணத்தைமுடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் இலங்கை திரும்பினுர் இவர் இரண்டு மாதங்களுக்கு மேலாக ரஷ்யாவில் தங்கியிருந்து பல இடங்களைப் பார்வையிட்டார்.

# புதிய கல்வித் திட்டத்தை எவ்விதம் தயாரித்தேன்

## கல்விமந்திரி விளக்குகிறூர்

காலி, திங்கள்

"எங்களுக்கென இதுவரை ஒரு தீர்க்கமான, திட்டமான கல்வித்திட்டம் இருந்ததில்லை. இப்பொழுதுள்ள கல்வித்திட்டம் ஒரு பொருத்து வேலையே. இலவசக்கல்வித் திட்டத்தைப் புகுத்தியதால் நன்மையும், தீமையும் ஏற்படும்" என்று கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அக்மீமன தேர்தல்தொகுதியில் உள்ள வக்வெல பாடசாலையில் புதிய கட்டிடத்தை திருவாளர்கள் இரியகொலை, டபிள்யு. தகநாயக்கா, காலிமேயர் டபிள்யு. டி. எஸ். அபயகுணவர்த்தன, பி. ஈ. ஜி. மெண்டிஸ் ஆகியோர் குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்தனர். இதன்பின்னர் நடைபெற்ற கூட்டத்துக்கு வண. கொனபினுவலபுன சார நாயக்க தேரோ தலைமை வகித்தார். கல்வி மந்திரி தமது பேச்சின்போது மேலும் குறிப்பிட்டதாவது:

கன்னங்கரா கல்விக் கொள்கை இதுவரை அமுலிலிருந்தவற்றில் சிறந்தது. இலவசக்கல்வி புகுத்தப்பட்டதேயொழிய வேறெதுவும்பற்றிக் கவனிக்கப்படவில்லை. படித்துவிட்டிருந்த லட்சக்கணக்காஞேர், ஏன் பட்டதாரிகள்கூட வேலையற்றிருக்கிறூர்கள். 600 பட்டதாரிகளுக்கு மட்டுமே ஆசிரியர் பதவிகள் கொடுக்கக்கூடியதாயிருக்க. 3000 பேர்மனுச்செய்துள்ளார்கள் முனசிங்கா கமிஷன், குணவர்த்தன கமிஷன், ஜயசூரியா கமிஷன் ஆகியவற்றின் அறிக்கைகளையும், முன்னுள் கல்வி மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லைதயாரித்தவெள்ளையறிக்கை ஆகியவற்றைக் கொண்டே நான் புதிய திட்டத்தை வகுத்துள்ளேன். வெளிநாட்டுநிபுணரின் உதவியும்எனக்குக்கிடைத்தது" திரு. தகநாயகா உட்பட மற்றும் பலரும் பேசினர்.

# கிளிநொச்சி படித்த வாலிபர்களுக்கு காணி!

யாழ்ப்பாணம், செவ்

கிளிநொச்சியிலுள்ள படித்த வாலிபர்களுக்கு இரணைமடுக்குளத்தின் தெற்குப் பக்கத்தில் காணிகள்வழங்குவதற்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் இரண்டு ஏக்கர் மேட்டு நிலமும், இதில் அரை ஏக்கர் காணியில் வீடு நிரந்தரப் பயிர்செய்து உபயோகிக்க வேண்டுமென்றும் மிகுதி ஒன்றரை ஏக்கரில் நெல் தவிர்ந்த ஏனைய தானியங்கள் பயிர்செய்ய வேண்டுமென்றும், எக்காரணம்கொண்டும் நெற்பயிர் செய்கைபண்ணக்கூடாதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாயப் பயிர்ச் செய்கையில்தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு இத்தெரிவில் விசேஷ இடம் கொடுக்கப்படும்.

இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடியேற்றவாசிக்கும் கீழ்வரும் அரசாங்க உதவிகள் வழங்கப்படும்.

நாளொன்றுக்கு உதவிப் பணமாக ரூபா 150 வீதம் ஒரு வருடத்துக்கு வழங்கப்படும். விவசாய ஆயுதங்கள்: 100 ரூபா, முட்கம்பி வேலி அடைப்பதற்கு: ரூபா 200, கட்டை பிடுங்குவதற்கு: 200 ரூபா, நிரந்தரக் கூரையுடன் வீடு அமைக்க: 1000 ரூபா (மாதிரிப் படத்திற்கு அமைய), காடு வெட்டி எரித்துத் துப்புரவு செய்ய: 200 ரூபா, பயிர்ச்செய்கை உதவிப்பணம்: 100 ரூபா, தற்காலிகக் கொட்டில் அமைப்பதற்கு: 90 ரூபா, வீதி முதலியன அமைப்பதற்கு; 225 ரூபா, பொதுத் தேவைக்கு அமைந்த கட்டிடங்கள் பலநோக்குக்கூட்டுறவுப் பண்டசாலை: 600 ரூபா, கிணறு: 1200 ரூபா. மேற்கூறியவற்றில் தேவை ஏற்படின் எதுவும் நீக்கப்படும் அல்லது மாற்றியமைக்கப்படும்.

ஒவ்வொரு குடியேற்றவாசியும் தனது காணித்துண்டின் பெயரால் காலவரையில் காணிக்கமிஷனரால் நிர்ணயிக்கப்படும் தொகையை வருடாந்த குத்தகைப்பணமாகக் கட்டவேண்டும்.

விண்ணப்பங்கள் மாதிரிப் பத்திரத்தில் 31-5-66ந் தேதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அரசாங்க அதிபர், கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும். தபால் உறையில் மூலையில்'படித்து வேலையற்ற இளைஞருக்கு காணிப் பங்கீடு-பிரதான வாய்க்கால் இளைஞர் குடியேற்றத் திட்டம்' என வரையப்படவேண்டும். எக்காரணம் கொண்டும் மேற்கூறிய திகதிக்குப் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## "நாட்டிற்காக உழையுங்கள்"

கங்கம, திங்கள்

விலைவாசிகளைக் குறைக்கவும், நாட்டின் உணவுப் பொருள் தேவையை நிவிர்த்திசெய்யவும் மக்கள் 24 மணித்தியாலங்களும் உழைக்கவேண்டும் என்று முன்னுள் பிரதமநீதியரசர் திரு. எச். பஸநாயக்கா வித்தியநிகேதன பிரிவினைக் கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. பஸநாயக்கா மேலும் பேசும்போது குறிப்பிட்டதாவது: பௌத்த சங்கங்கள் நாட்டின் உயர்ச்சிக்காகவும், நலனுக்காகவும் பாடுபடவேண்டும். பிரதானமாக கிராமப்புறங்களை நாம் அபிவிருத்தி செய்யவேண்டும். அரசாங்கத்தை எல்லாவற்றுக்கும் நம்பியிருத்தல் கூடாது. எல்லாரும் ஒற்றுமைப்பட்டு கலந்தாலோசித்துத் தேவைகளை நிவிர்த்திசெய்யவேண்டும் என்ருர்.

## 130,000 பேர் தான் சித்தி

கொழும்பு, திங்கள்

1965ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி. சி. ஈ. சாதாரணப் பரீட்சைக்கு 232,000 மாணவர்கள் தோற்றியிருந்தனர். ஆனுல் 130,000 மாணவர்களே எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்தனர். விஞ்ஞானப் பாடங்களை எடுத்தவர்கள் எதிர்பார்த்த அளவுக்குத் திறமையாகப் பாடங்களில் சித்தியடையவில்லையென்றும் கலைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் விசேஷமாகச் சித்தியடைந்துள்ளாரென்றும் பரீட்சை இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்

## அம்பாள் யானையில் பவனி

சுதுமலை, செவ்வாய்

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இன்று காலை விசேஷ அபிஷேக ஆராதனைகளும் மாலை கலை நிகழ்ச்சிகளும்இடம்பெறும். விநாயகர் சுப்பிரமனியர் சகிதமாய் அம்பாள் வீற்றிருக்கும் முத்துச்சப்பறத்தை குருநாகலிலிருந்து வரவழைக்கப்பட்ட யானை, இழுத்துச்செல்லும். தீக்குளிப்பு வைபவமும் நடைபெறும்.

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், செவ்.

எழுத்தாளர் திரு. எஸ். பொன்னுத்துரையின் 'வீ' என்னும் நூலின் அறிமுக விழா இன்று மாலை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

ரசிகமணி கனக செந்திநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் திரு. ஏ. ரி. பொன்னுத்துரை வரவேற்புரை நிகழ்த்துவார். யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திரு. க. தி. சம்பந்தன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். திருவாளர்கள் தேவன்-யாழ்ப்பாணம், வ. அ. ராசரத்தினம், செம்பியன் செல்வன், இ. வள்ளிநாயகி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

## நவாலிக்கு டெலிபோன்

யாழ்ப்பாணம், திங்கள்

சுமார் பத்து வருட முயற்சிக்குப்பின் நவாலியிலுள்ள உபதபால் கந்தோருக்கு டெலிபோன் வசதி கிடைத்திருக்கிறது. ஆனுல் அங்குள்ளவர்களுக்கு இன்னுமோர் மிக வசதிக்குறைவு இன்றுவரை தீரவில்லை. தற்சமயம் நவாலி வாசிகளுக்கு தபால் விநியோகம் மானிப்பாய் தபால்கந்தோர் மூலமாக நடக்கிறது. இதனுல் தபால்கள் நேரத்துக்கு வந்து சேராமை, சரியான விலாசதாருக்குக் கிடைக்காமை போன்ற பல கஷ்டங்கள் இருந்து வருகின்றன. டெலிபோன் வேண்டுமென்று கேட்டபோதே நவாலிக்கு தனியாக தபால் விநியோகம் செய்யும் வசதியும் வேண்டுமென்று பொதுமக்கள் மேலதிகாரிகளைக் கேட்டிருந்தும் பலன் கிட்டவில்லை. இப்பொழுது அவர்கள் மறுபடியும் ஒரு பிரபல தமிழ்த் தலைவர் மூலமாக மேலதிகாரிகளுக்கு ஒரு புதிய பெட்டிசம் அனுப்பியுள்ளார்?

## "பதில் கூறத்தான்வேண்டும்"

ஹொங்ஹொங், மே 23

இந்தோனேஷியாவில் வாழும் சீனர்களை மிருகத்தனமாக இம்சைப்படுத்தியதற்கு ஒருகாலத்தில் பதில் சொல்லவேண்டி வருமென்று சீனப் பத்திரிகையான 'டா குங் பாவோ' ஆசிரியத் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. (பி டி ஸி)

## செயற்கை இருதயம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதனுக்கு செயற்கை இருதயம் பொருத்தும் முயற்சி எப்படியும் தொடர்ந்து நடைபெறுமென்று இம்இரு சத்திரசிகிச்சைகளையும் நடத்திய டாக்டர் மைக்கல் டிபேக்கி கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## சங்கானை கிழக்கு மத்திய ப. நோ. கூட்டுறவுச்சங்கம்

### மனேஜர் தேவை

பின்வரும் தகைமையுடையோர் விண்ணப்பிக்கவும்.

1. 20க்கும் 35க்கும் உட்பட்ட வயதுடையோர்.
2. தராதரம்: ஜே. எஸ். ஸி.-கூட்டுறவுப் பயிற்சிக்கலாசாலையில் பயிற்றப்பட்டவராய் இருத்தல் விரும்பத்தக்கது.
3. பிணை: காசுப்பிணை ரூபா 1,500/-: ஆதனப்பிணை ரூபா 2000/-.
4. மாதவேதனம்: ரூபா 125/-
5. விண்ணப்பங்கள் 31-5-66வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் காரியதரிசி, சங்கானை கிழக்கு மத்திய ப. நோ. கூ. சங்கம் சங்கானை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். விலாசமிடப்படும் கவரின் இடது பக்கத்தின் மேலுறையில் 'மனேஜர் தேவை' என்று எழுதப்படல் வேண்டும்.

சி. க. திருச்சிற்றம்பலம்,
காரியதரிசி.
சங்கானை கிழக்கு மத்திய ப. நோ. கூ. சங்கம்.

433

## நிர்வாகக் காரியதரிசி தேவை

தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்) ப. நோ. கூ. சங்கங்களின் சமாசத்திற்கு ஒரு நிர்வாகக் காரியதரிசி தேவை. 20-6-66 நண்பகல் 12 மணிக்கிடையில் விண்ணப்பங்கள் சமாசக்காரியதரிசிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கவனிக்க வேண்டியன:

1. கணிதம் பதிவியலிலும், தமிழிலிலும், விசேட சித்தியுடைய பட்டதாரியாக இருத்தல் வேண்டும்
2. காசுப்பிணையாக ரூபா 2000/- கட்டல்வேண்டும்.
3. கூட்டுறவில் பயிற்சியும், அனுபவமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
4. ஆரம்ப வேதனம் சகல படிகளுமுட்பட ரூபா 250/- வழங்கப்படும்.

க. சரவணமுத்து,
காரியதரிசி.

431

## வட இலங்கைச் சங்கீத சபை யாழ்ப்பாணம்

### சங்கீதப் பரீட்சைகள்–1966

இவ்வாண்டுப்பரீட்சைகள் யாழ்ப்பாணம், கொழும்பு, திருக்கோணமலை, மட்டக்களப்பு, ஆகிய இடங்களில் 1966-ம் ஆண்டு ஆடி மாதம் 23-ந் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

விண்ணப்பங்கள் 15-6-66 வரை ஏற்றுக்கொள்ளப்பெறும். பிந்திய விண்ணப்பங்கள் 25-6-66 வரை ஏற்றுக்கொள்ளப்பெறும்.

விண்ணப்பப் பத்திரங்கள் மற்றும் விபரங்கள் ஆகியவற்றிற்கு தலைவர், வட இலங்கைச் சங்கித சபை, கல்விக்கந்தோர், யாழ்ப்பாணம் என்னும்விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்

பரீட்சைகள் புதிய பாடத்திட்டமையவேநடைபெறும்.

சி. தணிகாசலம்,
தலைவர்,
வடஇலங்கைச் சங்கீதசபை,
கல்விக்கந்தோர்,
யாழ்ப்பாணம்.
14-5-66

432

## பெயர் மாற்றம்

நா. இளையவன் ஆகிய எனதுபெயர் நா. இராசநாயகம் என வழங்கப்படுகின்றது என்பதைத்தெரிவித்துக்கொள்கின்றேன்



நா. இளையவன்

429 22-5-66


# இன்று முதல்!
# குதூகல ஆரம்பம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)

விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடோர்ன் (பதுளை)

தீவொளி (நுவரெலியா)

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த

சத்தியாமூவிஸ்

# தெய்வத்தாய்

இசை:
விஸ்வநாதன்—ராமமூர்த்தி


பாடசாலைகள்

## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

### சில முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்லூரிகளுக்கான 2ம் பிரிவுகளுக்கிடையேயான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் சில முடிவுகள் வருமாறு:

யாழ். மத்தியகல்லூரிக்கும், மகாஜனக்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற முதலாவது போட்டியில் மகாஜனக்கல்லூரியை யாழ். மத்தியகல்லூரி 7 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது. இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் இரு கோஷ்டிகளும் நன்றாக விளையாடி வெற்றி தோல்வியின்றி முடித்தனர். இப்போட்டி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்துக்கும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி திறமையாகப் போட்டியிட்டு கனகரத்தினம் மகவித்தியாலயத்தை 10 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது. இப்போட்டி ஸ்கந்தவரோதயாக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இப்போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

ஓட்டுக்குள் இழுத்துக் கொண்டாலும் அவற்றை பலவந்தமாக வெளியே இழுத்து ஒவ்வொரு காலாக வெட்டி, பின் தலையையும் வெட்டி, வயிற்றுப் பக்கத்தில் மூடியிருக்கும் மெல்லிய தசையைக்கீறி உள்சதையை எடுக்கும் வரை அது சக்தியற்றதாய், பேசவும் முடியாமல், கத்தவும் முடியாமல் அந்த சித்திரவதையை மௌனமாக சகித்துக் கொண்டிருக்கிறது.

அதிக துன்பமில்லாமல் ஆமையைக் கொல்வதற்கு வழி ஒன்றும் கிடையாதா? மிருக சம்ரட்சணைசங்கமும், கிராம முன்னேற்ற சங்கங்களும், ஏன், பொதுமக்களுமே இதுவிஷயத்தை சிறிது கவனித்தால் நன்று.

—வழிப்போக்கன்


REGAL—JAFFNA
NOW SHOWING!
URSULA ANDRESS
in
H. Rider Haggard's
SHE
(Cinemascope - Tecnicolor)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
என்.டி. ராமராவ் - கே. மாலதி
நடித்த
பாதாள பைரவி

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 10-00
எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி
நடித்த
தெய்வத்தாய்


# வரி விளம்பரம்

## தேவை

அச்சுக்கோர்ப்பதில் பயிற்சி பெறுபவர்கள்

தினசரிப்பத்திரிகை ஒன்றுக்கு அச்சுக்கோர்ப்பதில் (கொம்போஸிங்) பயிற்சி பெறுவதற்குப் படித்த இளைஞர்கள்உடனடியாகத்தேவை. தமிழ்மொழியில் போதுமான அறிவு பெற்றிருப்பது அவசியம். ஆங்கிலத்தில் அறிவு பெற்றிப்பது மேலதிக தராதரமாகக்கணிக்கப்படும், விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கும் 25 வயதுக்குட்பட்டவர்களாகவும் நல்ல உடலுறுதியுடையவர்களாகவும் இருக்கவேண்டும். விளம்பர இலக்கம்: 383 'ஈழநாடு' மேற்பார்த்து த. பெ. 49, யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 383

விற்பனையாளர்கள்

விற்பனையாளர்கள்தேவை. நேரில் வரவும். விநாயகம் இன்டஸ்றீஸ், (வெலிங்டன் சந்தி) யாழ்ப்பாணம். 389

தொழிலாளர்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஆரம்பித்த பித்தளை உருக்குத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யும் பித்தளைப் பிணைச்சல்கள், கைபிடிகள், பூட்டுகள் மற்றும் பித்தளைச் சாமான்களை உயர்ந்தமுறையில் மட்டசுத்தமாக எமரி (Emery) அடித்து பொலிஸ் (Polish) செய்வதற்கு சுமார் ஐந்து வருட அனுபவம் வாய்ந்த தேர்ச்சிபெற்ற தொழிலாளர் உடனே தேவை. விளம்பர இல. 382, 'ஈழநாடு' மே./பா. என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 382

## விற்பனைக்கு

கார்

இரண்டு கதவுடைய நல்ல நிலைமையிலுள்ள காட்சியில் வைக்கக்கூடிய CN இலக்க மொரிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. எகபா (f)லி அன்கோ லிமிட்டெட், "லொக்கேட் மில்ஸ்", கொழும்பு-12, என்ற விலாசத்தில் பார்வையிடலாம். போன்: 78436. 390

கார்

4 ஸ்ரீ 3000 இலக்கத் தொடருடைய நல்ல நிலைமையிலுள்ள காட்சியில் வைக்கக்கூடிய இரண்டு வோக்ஸ் வகன் கார்கள் விற்பனைக்குண்டு. எகபா (f)லி அன் கோ லிமிட்டெட், "லொக்கேட்மில்ஸ்" கொழும்பு-12 என்ற விலாசத்தில் பார்வையிடலாம். போன்: 78436. 391

## காணவில்லை

பையன்

எனது மகன் அமரசிங்கம் பொதுநிறம், வயது 9 1/2, உயரம் 3 1/2 அடி. 22-5-66-ம் திகதி காலை 9-00 மணியிலிருந்து காணவில்லை. வெள்ளைக் காற்சட்டையும் பச்சைநிற அரைக் கைச் சேட்டும் அணிந்திருந்தார், கண்டுபிடிப்பவர்கள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது வேலுப்பிள்ளை குமாரசாமி, ஆனைக்கோட்டை என்ற விலாசதாரரிடம் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 388

## வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கேவுாலடி, யாழ்ப்பாணம்

## சந்தேக நபர்களு . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

காரியதரிசிகளும் அறிக்கை சமர்ப்பித்தார்களா? அவ்வாறுயின் என்னவாயிற்று என்றும் திரு. கெனமன் வினவினர்.

இரகசியப் பொலிஸ் கந்தோரில் ஒரே நாளில் நடைபெற்ற இரு தற்கொலைகள் பற்றியும் திரு. கெனமன் பிரஸ்தாபித்து மாஜிஸ்திரேட் இரண்டும்தற்கொலையெனத் தீர்ப்பளித்துள்ளார் என்பதைச் சுட்டிக்காட்டி அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டதென வினவினர்.

## பிரதமரின் வெளிநாட்டுப் பயணம்

பிரதமரின் வெளிநாட்டுப் பயணம்பற்றி நீண்டநேரம் மதவாச்சி எம் பி திரு. மைத்திரிபால சேனநாயகா நீண்ட நேரம் பிஸ்தாபித்ததற்குப் பதிலளிக்கையில் தான் அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் சென்ற போக்குவரவுப் பிரயாணச் செலவு எதுவும் அரசாங்கத்தின் செலவு வகையில் சேர்க்கப்படவில்லை என்றும் இக்கட்டத்தில் முன்னுள் பிரதமர் இந்தியாவுக்கு விஜயஞ்செய்தது பற்றியும் அவர் தன்னுடன் யார் யாரையெல்லாம் அழைத்துச். சென்றாரென்றும் சகல செல-(வு)களையும் அரசாங்கக்கணக்கிலேயே செலவுசெய்யப்பட்டதாகவும் தெரிவித்தார் தான் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றது தனது சொந்தச் செலவில் என்பதையும் பிரதமர் தெளிவுபடுத்தினர்.

## கல்வி மந்திரி ராஜினமா செய்வாரா?

பம்பலப்பிட்டி, திங்கள்

கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை தனதுபதவியை ராஜினமாச் செய்யப் போவதாக பலத்த வதந்தி அரசியல் வட்டாரங்களில் அடிபடுகிறது. நேற்று நடைபெற்ற அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் உயர்தரக்கல்விபற்றி திருஇரியகொல்லைதயாரித்த மசோதாவிற்கு பலத்த எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

பார்லிமெண்டரிக் குழுக்கூட்டத்தில் பல்கலைக் கழகம் சம்பந்தப்பட்டமட்டில் மந்திரிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் கல்வியில் அரசியலைக் கலந்து நாட்டின் உயர் கல்வியைப் பெரிதும் பாதிக்கும் என எம். பி.க்கள் மத்தியில் பொதுவான அபிப்பிராயம் நிலவியது. பல்கலைக்கழகம் ஒரு கல்வி ஸ்தாபனம் என்ற நிலை நிரந்தரமாக பாதுகாக்கப்பட வேண்டுமெனவும்திருஇரியகொல்லையின் திட்டம் பல்கலைக் கழககல்வியின் ஒவ்வொரு

(5-ம் பக்கபார்க்க)

அம்சத்திலும் மந்திரிஅதிகாரம் செலுத்த வகை செய்கிறதெனவும் அரசாங்க கட்சியைச்சேர்ந்த எம். பி.க்கள் பலத்த கண்டனம் தெரிவித்தனர்.

திரு இரியகொல்லைதனது திட்டத்தை கைவிடத் தயாராயில்லையென்றும் அவர் தமது பதவியை ராஜினாமாச் செய்வாரென அரசாங்க கட்சிவட்டாரங்கள்உட்பட அரசியல்வட்டாரங்களில்கூறுப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னூர் மீனவருக்கு அடையாள அட்டைகள்

## இரு வாரங்களுக்குள் வழங்க நடவடிக்கை

(நமது நிருபர் அரசரத்தினம்)

யாழ்ப்பாணம், செவ்வாய்

மன்னூர்ப்பகுதியிலுள்ள மீனவர்களுக்கு விரைவில் அடையாள அட்டைகள் வழங்கப்படவிருப்பதாகவும் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் அறியப்படுகிறது.

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்கவும், சட்டவிரோதக் குடியேற்றக்காரரைச் சுலபமாகக் கண்டுபிடிக்கவும் இந்த அடையாள அட்டைகள் உதவுவதுடன் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என்ற சந்தேகத்தின்மீதும் மன்னூர்ப்பகுதி மீனவர்கள் வீணாகக் கைதுசெய்யப்படுவதையும் தவிர்க்கவும் இது உபயோகப்படுமெனக் கருதப்படுகிறது.

மன்னூரில் மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட பின்னர் இதர பகுதிகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

## "யாழ்ப்பாணப் பகுதியில் அரசாங்கம் விசேஷ அக்கறை"

கொழும்பு, திங்கள்

யாழ்ப்பாணப் பகுதியில் அரசாங்கம் விசேஷஅக்கறை செலுத்தி வருவதாக இம்மாதம் 20-ம் திகதி ஜனதின சிங்கள ஏடு செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. இந்தச் செய்தியை முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தியாக அது பிரசுரித்துள்ளது.

1964...1965 வருடத்துக்காக வடபகுதியிலிருந்து அரசாங்கத்துக்கு வந்துசேர வேண்டிய ரூ. 128,062.88 வரிப்பணம் வந்துசேரவில்லையென்றும் மேலும் 'ஜனதின' செய்தி கூறுகின்றது.''

''யாப்பாணப் பகுதியின் அபிவிருத்திட்டம் சம்பந்தமாக மந்திரிகள் திரு. சி. பி. டி' சில்வா, திரு. எம். திருச்செல்வம், டாக்டர் தஹநாயக்கா ஆகியோர் மகாநாடொன்றை நடாத்தினர். யாழ்ப்பாணத்தால் பன்னிரண்டு அபிவிருத்தித்திட்டங்களை செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. வானொலி நிலையமும், தண்ணீர் விநியோகமும் இந்த அபிவிருத்தித் திட்டங்களில் இரு பெரும் முக்கிய திட்டங்களாகும்'' என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தண்ணீர் விநியோகத் திட்டம் சம்பந்தமாக இஸ்ரேல் நிபுணர்கள் யாழ்ப்பாணத்தில் வேலை செய்து கொண்டிருப்பதாகவும் இச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## தமிழ் போதனா..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வியையும் இப் பல்கலைக் கழகம் போதிக்கக் கூடியதாக இருக்குமென்றும் திரு. செல்வநாயகம் விபரித்தார்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தை கிழக்கு மாகாணத்தில் நிறுவுவதென்ற முடிவை வடக்கு மாகாண தமிழ்ப் பேசும் மக்களின் ஐக்கியத்தைக் கருத்திற்கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பதினெட்டு எம். பி.க்களும் ஏகமனதாக வரவேற்றுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

தங்களது தொகுதிக்குள் அமைக்காது, கிழக்கு மாகாணத்தின் ஒரு இடத்தில் வட மாகாணத்துக்குச் சற்று சமீபமாக தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவும் யோசனைக்கு வடக்கு மாகாண எம். பி.க்களும் மட்டக்களப்பு அம்பாறை தொகுதி எம். பி.க்களும் இணக்கம் தெரிவித்து விட்டனர் என்றும் செல்வநாயகம் கூறினார்.

இந்த யோசனை மீது கடுமையான விவாதம் நடைபெற்றபோதிலும், தமிழ் பேசும் மக்களின் ஒருமைப்பாட்டைக் கருத்திற் கொண்டு 18 எம். பி.க்களும் இணங்கி விட்டனர் என்றும் அவர் கூறினார்.

### கையெழுத்திட்டவர்கள் விபரம்

இம் மகஜரில் தமிழரசு கட்சி எம். பி. க்களான திருவாளர்கள் எஸ் ஜே வி செல்வநாயகம், வி நவரத்தினம், வி என் நவரத்தினம், எஸ் எம் இராசமாணிக்கம், எஸ் கதிரவேற்பிள்ளை, வி தர்மலிங்கம், வீ ஏ அழகக்கோன், வி மாணிக்கராஜா, பண்டிதர் கா பொ இரத்தினம், ஏ அமிர்தலிங்கம், ஈ எம் வி நாகநாதன், செ இராசதுரை, முகமதலி ஆகியோரும் பொத்துவில் எம். பி. திரு. அப்துல் மஜீத், மூதூர் எம் பி திரு ஏ எல் ஏ மஜித் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி) நிந்தவூர் எம் பி திரு முஸ்தபா (ஐக்கிய தேசியக் கட்சி), கல்குடா எம் பி திருகே டபிள்யு தெய்வநாயகம் (ஐக்கிய தேசியக் கட்சி) ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

## அஸ்திபாரக்கல் நாட்ட இன்று இங்குவரும் மந்திரி

### இன்றுமாலையே கொழும்பு திரும்புவார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் அரசாங்க பொறுப்பில் கட்டப்படவிருக்கும் 72 வீடுகளுக்கு தொழில் வீடமைப்பு மந்திரி ஜனாப் எச். எம். முகமது இன்று பிற்பகல் இரு இடங்களில் அத்திவாரக் கல் நாட்டுவார்.

இரு திட்டங்களைக் கொண்ட இந்த வீடமைப்புத் திட்டம், யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2-ம், 3-ம், 4-ம் வட்டாரங்களில் ஸ்தாபிக்கப்படும். 2-ம், 3-ம் வட்டாரங்களில் 48 வீடுகளும், 4-ம் வட்டாரத்தில் 24 வீடுகளும் கட்டப்படும்.

இன்று காலை 10-30 மணிக்கு, வீடமைப்பு மந்திரி விசேஷ விமானத்தில் பலாலி விமானநிலையத்தை வந்தடைவார். அதே விமானத்தில் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் மந்திரியுடன் வருவார்.

காலை 11 மணிக்கு மந்திரி, யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன கடன் நிவர்த்திச் சங்கக் காரியாலயத்திற்கு விஜயம் செய்வார். காலை 11-30 மணிக்கு ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வு சகாய காசோலையை, மந்திரியும், யாழ்ப்பாண எம். பி.யும் கையளிப்பார்கள் அதன்பின் தேசிய சுகாதார சேவையாளர் தொழிலாளர் சங்கத்திற்கு மந்திரி விஜயம் செய்வார். மந்திரியிடம், வீட்டுப்பிரச்சினை சம்பந்தமான மகஜர் ஒன்றை சங்கத்தினர் கொடுப்பார்கள்.

நண்பகல் 12 மணிக்கு யாழ். மக்கள் துறைமுகத் தொழிலாளர் பொதுச் சேவை கூட்டுறவு சங்கத்திற்கு மந்திரி விஜயம் செய்வார். யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சங்கத்தின் புதிய காரியாலயத்தை திறந்து வைப்பார். வீடமைப்பு மந்திரி ஜனாப் முகமது, காரியாலயத்தில், பிரதமர் டட்லி சேனநாயக்காவின் படத்தை திரைநீக்கம் செய்துவைப்பார்.

அதன்பின் அங்கு நடைபெறும் வரவேற்புக் கூட்டதில் யாழ்ப்பாண மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. கே. சிவப்பிரகாசம், 'தொழிலாளர்களின் ஒற்றுமை' என்னும் விஷயம் பற்றிச் சொற்பொழிவாற்றுவார். யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, தொழில் கமிஷனர் திரு. ஜி. டி. ராஜா ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள்.

யாழ்ப்பாணத்தில் சேரி ஒழிப்பு பற்றியும், புதிய வீடுகள் ஸ்தாபிப்பது பற்றியும் மநதிரி உத்தியோகத்தர்களுடன் ஆராய்வார்.

பிற்பகல் 2-30 மணிக்கு முதலாவது வீடமைப்புத் திட்டத்திற்கு காட்டுக்கந்தோருக்குப் பின்புறம் உள்ள நிலத்தில் மந்திரி அத்திவாரக்கல் நாட்டுவார். அதன்பின் அவ்விடத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும்.

பிற்பகல் 3-30 மணிக்கு 2-ம் வாட்டாரத்திலுள்ள குருநகர் சனசமூக நிலையத்திலிருந்து 'ரெக்கிளமேஷன்' மைதானத்திற்கு மந்திரி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். அங்கு இரண்டாவது வீடமைப்புத் திட்டத்திற்கு மந்திரி அத்திவாரக்கல் நாட்டுவார்.

மாலை 4 மணிக்கு 3-ம் வட்டாரத்திலுள்ள சனசமூகநிலையத்திற்கு மந்தரி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில், வீடமைப்பு மந்திரி, யாழ்ப்பாணம் எம். பி., யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

மாலை 4-15 மணிக்கு மந்திரி விமானத்தில் கொழும்பு திரும்புவார்

## புதிய நிர்வாகிகள்

பருத்தித்துறை, திங்கள்

நெல்லண்டை அம்மன் கோவிலில் வருடாந்தப் பொங்கல்விழா கொண்டாடப்பட்டது. இரவு நெல்லண்டைஅம்மன் கோவில் பரிபாலனசபையின் வருடாந்தக் கூட்டம் திரு. கோ. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்புவருட உத்தியோகஸ்தராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்-திரு. என். எம். கந்தசாமி, காரியதரிசி திரு. மா. பாலசுப்பிரமணியம், தனாதிகாரி- திரு. சி. முருகுப்பிள்ளை, முகாமையாளர் திரு. வி. ஏரம்பு

ஒன்பதுபேர் கொண்ட நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது.

## இடமாற்றம்

கோண்டாவில், திங்கள்

கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய திரு. எஸ். குணரத்தினம் கொக்கறலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இம் மாதம் 26-ம் திகதி அவருக்கு மேற்படி ஆஸ்பத்திரி ஊழியரால் பிரவுபசாரவிழா ஒன்று நடாத்தப்படவிருக்கிறது.

## நல்லூர் கிரமசபை முன்னாள் தலைவர்

### பார்லிமெண்டில் கேள்வியும் பதிலும்

கொழும்பு, திங்கள்

நல்லூர் கிராமசபையின் முன்னாள் தலைவர் கிராமசபையின் வரி வரவுகளை கச்சேரியில் ஒழுங்காகச்செலுத்தாது பல்லாயிரக்கணக்கான ரூபா பணத்தை மோசடி செய்துள்ளார் என ஸ்தல ஸ்தாபனஉதவி மந்திரி திரு. ஆர். பிரேமதாசா இன்று திரு. டி. பி. அட்டிகலையின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

திரு. அட்டிகலை, நல்லூர் கிராமசபைத் தலைவர் பல்லாயிரம் ரூபாய்களை மோசடி செய்தது பற்றித் தெரியுமா என உதவி மந்திரியிடம் கேட்டிருந்தார்.

இது பற்றித் தனக்குத் தெரியும் என்றும் தற்போதைய தலைவரை ஒழுங்காக வருமானத் தொகையைச் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இப்பணத்தை ஒழுங்காகக் கட்டத்தவறின் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், கிராமசபையின் கணக்கு விபரம் சரியாக்கப்பட்டது எனவும் மோசடியின் போது தலைவராகவும் உபதலைவராகவும் இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்உதவி மந்திரி தெரிவித்தார்.

## இந்தியா திரும்புவோருக்கு சர்வதேச உதவி

### ஜெனிவா மகாநாட்டில் தொண்டமான் கோருவார்

கொழும்பு, திங்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபன மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக விரைவில் செல்லவிருக்கிறார். இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படவிருக்கும் இந்திய வம்சாவழியினரின் புனர் வாழ்வுக்கு வழிசெய்யும் வகையில் சர்வதேசத் தொழிலாளர் நல ஸ்தாபனத்திடமிருந்து நிதி மற்றும் உதவிகள் பெற்றுக்கொள்வது பற்றியும் திரு. தொண்டமான் ஜெனிவாவில் பேச்சுவார்த்தைகள் நடத்துவார் என்று தெரிகின்றது.

அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற சர்வதேச சுதந்திர தொழிற் சங்கங்களின் சம்மேளன மகாநாட்டில் இந்தப் பிரச்சினை பற்றி திரு. தொண்டமான் பிரஸ்தாபித்து உதவிகள் வேண்டினார். இந்தியாவுக்குத் திரும்புகிறவர்களுக்கு உதவிகள் அளிப்பது என்று அந்த மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. சர்வதேச சுதந்திரத் தொழிற் சங்க சம்மேளனத்தின் ஆசியப் பிராந்தியக் கிளையின் உப கமிட்டியொன்று அடுத்தமாதம் மைசூர் ஒரிஸ்ஸா, தென் இந்தியா மற்றும் அந்தமான் தீவுகள் போன்ற பகுதிகளுக்கு விஜயம் செய்து இந்தியாவுக்குத் திரும்புகிறவர்களின் புனர்வாழ்வுக்கான ஏற்பாடுகள் பற்றி ஆராயவிருக்கின்றனர்.

''இந்தியவம்சாவழியினரை கட்டாயமாக நாடு கடத்துவது பற்றிய பிரச்சினை எழலாம். ஆனால் இந்திய வம்சாவளியினர் தம் இஷ்டபடி வெளிஏேற்றும் அடிப்படையில் தான் இவர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டும். கட்டாய நாடுகடத்தல் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் நோக்கத்தையே முறியடிப்பதாகும்'' என்று திரு. தொண்டமான் இன்று நிருபர்களிடம் கூறினார். இது விஷயமாக அவர் ஏற்கனவே அரசாங்கத்துக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்

## கட்டைவேலி ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக ஊழல் புகார்பற்றி சென்றசில மாதங்களாக நடைபெற்றுவந்தவிசாரணையின்பின் சபையைக் கலைக்கும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இக்கிராம சபை விரைவில் கலைக்கப்படவிருப்பதாக சென்ற வாரம் 'ஈழநாடு' செய்தி வெளியிட்டிருந்தது வாசக நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

## சிரமதானம் மூலம் வீதி அமைத்தனர்

யாழ்ப்பாணம், திங்.

ஆனைக் கோட்டை உயரப்புலத்திலுள்ள கோவில் வீதியொன்றை ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் சிரமதானம் மூலம் அமைத்துள்ளனர்.

சுமார் ஒரு மைல் நீளமான இவ் வீதியை சிரமதானம் மூலம் அமைப்பதில், இளைஞர்கள் வயயோதிபர்கள் ஆகியோருடன் பெண்களும் ஈடுபட்டனர்.

## வடக்கே மகாவலி

கொழும்பு, திங்கள்

வடக்கே மகாவலி கங்கையைத் திருப்புவது சம்பந்தமான அறிக்கையை ஐ. நா. நிபுணர்கள் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளனர். டிசம்பர் மாதத்தில் இதற்கான வேலைகள் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது'

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 24ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org